DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 262/ 2018 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 7 |
| Name | திரு. சரவணன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | காவல் ஆய்வாளர், செக்யூரிட்டி பிரிவில் சென்னை மாநகரம் |
| Religion | |
| Age | |

<u>( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 23-03-2026.(நேரம்: 03.30PM )**

**( சாட்சியம் காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது)**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது சென்னை மாநகரத்தில் உள்ள செக்யூரிட்டி பிரிவில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன்.

2. இதற்கு முன்பாக ஏரல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 11.04.2018 ஆம் தேதி 4.00 மணிக்கு ஏரல் காவல் நிலைய தலைமை காவலர் திரு. சுப்பையா நிலைய பொறுப்பில் இருந்தபோது தலைமை காவலர் திரு. சுப்பையா அவர்களிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் நிலைய குற்ற எண் 67/2018 சட்டபிரிவுகள் 294(b),323,506(2) இதச வாக பதிவு செய்த வழக்கை விசாரணைக்கு வேண்டி எனது வசம்

ஒப்படைத்தார்.**அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3.வழக்கு கோப்பை எடுத்துக்கொண்டு நான் 11.04.2018 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வெங்கடேஷ் மற்றும் ஞானசேகர் ஆகியோர்கள் முன்னிலையில் வழக்கு சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 6 ,7ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. சாட்சிகள் முத்துசெல்வம், இசக்கி, ரங்கன், பாஞ்சாலி தேவி , வெங்கடேஷ், ஞானசேகர் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் திரு. சுப்பையா ஆகியோர்களை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5.சம்பவத்தை விசாரணை செய்ததன் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை தேடி சென்றபோது தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சிஆர்எம்பி எண் 1120/2018 பிரகாரம் முன் ஜாமின் பெற்றதால் கைது செய்ய இயலவில்லை.

6.பின்பு இவ்வழக்கில் காயம்ப்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவர் திரு. சங்கரலிங்கம் என்பவரை விசாரித்து காயசான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7. இவ்வழக்கின் சட்டபிரிவான 294(b),323,506(2) இதச விலிருந்து 294(b),325,506(2) ஆக சட்டபிரிவு மாறுதல் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. இத்துடன் தனது விசாரணையை முடித்து 09.06.2018 ஆம் தேதி எதிரி மீது 294(b),325,506(2) இதச குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

வழக்கின் உள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

வழக்கானது புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி காணொலி மூலம் சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.